# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2240/33 - 2021 අගෝස්තු මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.08.12

*2240/33 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 1/2012*

**1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்**

*1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கடற்றொழில் அமைச்சர்.**

கொழும்பு,
*2021, யூலை 01.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் உயிர் மீன் ஏற்றுமதியாளர்களுக்கான நியமங்கள் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் -

(அ) மூன்றாம் பாகத்தின் ஏற்பாடுகள் தவிர, நன்னீர் அலங்கார மீன் ஏற்றுமதியாளர் ஒவ்வொருவருக்கும் ஏற்புடையதாதல் வேண்டும் ;

(ஆ) இரண்டாம் பாகத்தின் ஏற்பாடுகள் தவிர, கடல்சார் அலங்கார மீன் ஏற்றுமதியாளர் ஒவ்வொருவருக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.


1A — PG 5527 - 1,520 (2021/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கான செயலிடத்தைப் பரிசோதித்தலும் கண்காணித்தலும் வேண்டும்.

பாகம் I

**பொது**

4. ஒவ்வொரு செயலிடமும், அலங்கார மீனின் வசதியானதும் துரிதமானதுமான இடம்பெயர்த்துதலை வழங்குவதற்கென இலகுவான அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு செயலிடமும், மீனின் தரத்தைப் பாதிக்கும் ஏதேனும் மாசுபடுத்தல் அற்ற சூழல் ஒன்றில் அமைக்கப்படுதல் வேண்டும்.

6. ஒவ்வொரு செயலிடமும், நற்தரத்தினதான நீர் வழங்கல் இடையீடு இல்லாத மின்சக்தி வழங்கல் மற்றும் வேறு வாழ் வசதிகளின் போதிய அளவைப் பேணுதல் வேண்டும்.

7. (1) வண்டல் தொட்டிகள் மற்றும் பரிகரிப்புத் தொட்டிகளின் போதிய எண்ணிக்கை போன்ற நீர்மக்கழிவின் அகற்றுகைக்கான ஒவ்வொரு செயலிடமும், வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் என்பதுடன் சூழலுக்குப் பாதகமற்ற முறையொன்றில் கழிவு அகற்றுகையை நிறைவேற்றுதலும் வேண்டும். வினைத்திறனான நீர்மக்கழிவு அகற்றுகைக்காக மத்திய சூழல் அதிகார சபையிடமிருந்து அல்லது இயைபான மாகாண சூழல் அதிகார சபையிடமிருந்து விதப்புரைகளை ஒவ்வொரு செயலிடமும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விதப்புரைகளுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(2) ஒவ்வொரு செயலிடமும் வினைத்திறனான நீர்மக்கழிவின் அகற்றுகையை எய்துவதற்கென -

(அ) வண்டல் தொட்டியொன்றிற்கு அனுப்புவதற்கு முன்னர் எவையேனும் நீர்மக்கழிவுகள் அகற்றப்பட வேண்டிய நீருக்கு தொற்று நீக்கிகளை இடுதல் வேண்டும். அத்தகைய நீர், இயற்கை நீர் வழிகளுக்கு அகற்றப்படுதல் ஆகாது.

(ஆ) கொங்கிறீற்று மூடியொன்றுடனான கொங்கிறீற்று குழியொன்றிற்கு இறந்த மீனை அகற்றுதல் வேண்டும் அல்லது அத்தகைய இறந்த மீனை மூடப்பட்ட இடப்பரப்பொன்றில் எரித்தல் வேண்டும்.

8. பண்ணைக்கு உள்ளே மற்றும் பண்ணைக்கு வெளியே சூழல் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு துப்பரவு செய்தல், பெருக்குதல் மற்றும் வேறு வழிமுறைகளின் கிரமமான கண்காணிப்பை ஒவ்வொரு செயலிடமும் கொண்டிருத்தல் வேண்டும்.

9. தெளிவாக சுட்டுத்துண்டிடப்பட்டு காப்பாகக் களஞ்சியப்படுத்தப்பட்ட சார்பு உயிர்ம மருந்துகள் உள்ளடங்கலாக எல்லா இரசாயனப் பொருட்கள், விலங்கின ஔடதங்களை ஒவ்வொரு செயலிடமும், வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் செயலிடத்தினுள் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத ஔடதம் அல்லது இரசாயனப் பொருளைக் கொண்டிருத்தல் ஆகாது.

10. ஆளணியினர், சாதனம் மற்றும் மீனின் காப்பிற்கான வழிமுறைகளை ஒவ்வொரு செயலிடமும் எடுத்தல் வேண்டும்.

11. ஒவ்வொரு செயலிடமும், பின்வருவன உள்ளடங்கலாக மீனின் நற்சுகாதார நிலைமைகளைப் பேணுவதற்கான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்-

(அ) தொட்டிகளைத் துப்பரவு செய்தல், வடியச் செய்தல் மற்றும் தொற்றுநீக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் ;

(ஆ) மீன் தீனியளித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் ;

(இ) கையிருப்பில் வைத்தல் மற்றும் மீன்பிடித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் ;

(ஈ) நோய்த்தடுப்பு பரிகரிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் ;

(உ) வடியச் செய்தல் குழாய்கள், மீன்பிடிக்கும் வலைகள், கைவலைகள், இறந்த மீன் சேகரிக்கும் வலைகள், வட்டில்கள் மற்றும் வாளிகள் முதலியனவற்றின் போதிய எண்ணிக்கை கிடைக்கக்கூடியதாக இருக்கின்றமை ;

(ஊ) இறந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட மீனின் காப்பான முறையிலான அகற்றுகைக்கான வாழ்வசதிகள்.

12. ஒவ்வொரு செயலிடமும் தொற்றுத்தடைத் தொட்டிகளில் எதிர் உயிர்ம மருந்துகளைப் பயன்படுத்தாமை போன்ற, விலங்கின மருந்துகளின் பொறுப்பான பயன்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான ஒவ்வொரு வழிமுறையையும் எடுத்தல் வேண்டும்.

13. செயலமர்வுகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் சிறந்த நீர்வாழ் விலங்குச் சுகாதாரம் மற்றும் சேமநல முகாமைச் செயல்முறைகள் பற்றி வேலையாளர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒவ்வொரு செயலிடமும் கொண்டிருத்தல் வேண்டும்.

14. வருகை தருவோர்களின் மட்டுப்பாடு உள்ளடங்கலாக வளவுகளுக்குள் நோய்க்காவுநர்கள் நுழைவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஒவ்வொரு செயலிடமும் எடுத்தல் வேண்டும்.

15. செயலிடம் எதுவும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட அல்லது எவரேனும் ஆளினால் உடைமையில் வைத்திருப்பதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தடை செய்யப்பட்ட ஏதேனும் மீன் அல்லது நீர்வாழ் தாவரத்தைக் கொண்டிருத்தல் ஆகாது.

16. மீனின் உடல்நலத்தைப் பரிசோதனை செய்வதற்கு அடிப்படை நீர்தர அளவுருக்கள், நீர்தர பரீட்சிப்புக் கருவிகள் மற்றும் நுண்ணோக்கி ஒன்று போன்ற அடிப்படைச் சாதனத்துடனான ஆய்வுகூடமொன்றை ஒவ்வொரு செயலிடமும் பேணுதல் வேண்டும் என்பதுடன் மீன் நோயைக் கண்டறிதல் மற்றும் வேறு ஆய்வுகூடச் செயற்பாடுகளில் பயிற்சியுடனான தொழில்நுட்பவியலர் ஒருவரின் சேவைகளை ஈடுபடுத்துதலும் வேண்டும்.

17. ஏதேனும் நோய் அறிக்கையிடப்படின் அல்லது கண்டறியப்படின் அதனை ஏழு நாட்கள் காலப்பகுதியொன்றினுள் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒவ்வொரு செயலிடமும் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் எதிர்காலக் குறிப்பீட்டுக்காக செயலிடத்தில் கண்டறியப்பட்ட எல்லா நோய்கள் பற்றிய பதிவேடுகளைப் பேணுதலும் வேண்டும்.

18. ஒவ்வொரு செயலிடமும், ஒவ்வொரு கப்பலேற்றுகைக்காக வெளிநாட்டு வாங்குநர்களிடமிருந்து பின்னூட்டி அறிக்கையைப் பெறுதல் வேண்டும் என்பதுடன் அறிக்கையிடப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பரிகார வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதலும் வேண்டும் ; அத்துடன் எதிர்காலக் குறிப்பீட்டுக்காக ஒவ்வொரு கப்பலேற்றுகைக்கான விபரமான பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும்.

19. ஒவ்வொரு செயலிடமும், பின்வருவன உள்ளடங்கலாக கையிருப்பில் உள்ள மீன் தொடர்பான பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும் :

(அ) உற்பத்தி விபரங்கள் பற்றிய திகதி ;

(ஆ) கையிருப்பில் உள்ள மீன் பண்ணைக்குக் கொண்டு வரப்படும் திகதி ;

(இ) குஞ்சு பொரிப்பகத்தின் சொந்தக்காரர்களின் பெயர்கள் ;

(ஈ) எந்தப் பண்ணைகள் அல்லது கடல்சார் மீன் வழங்குநர்களிடமிருந்து மீன் பெறப்பட்டதோ அந்தப் பண்ணைகள் அல்லது கடல்சார் மீன் வழங்குநர்களின் விபரங்கள் ;

(உ) கையிருப்பில் உள்ள மீனை அனுப்புதல் பற்றிய விபரங்கள் ;

(ஊ) மீன் வாங்குநர்களின் பெயர்கள் ;

(எ) எவையேனும் நோய்கள் பற்றிய அறிக்கைகள் ; அத்துடன்

(ஏ) ஏதேனும் பரீட்சிப்பு மற்றும் தொற்றுத்தடையிடல் தொடர்பான அறிக்கைகள்.

20. ஒவ்வொரு செயலிடமும், மீன் பிரிவைப் பெறுதல் மற்றும் வகைப்படுத்தலுக்காக பின்வரும் வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் :

(அ) மீன் அனுப்பு பொருட்தொகுதிகளை இலகுவாக அனுப்புவதற்காக வாகனமொன்றின் மூலம் இடப்பரப்பிற்கான முறையான அணுக்கத்தைப் பேணல் ;

(ஆ) மீன் பையைக் கையாளுதல், இடப்பரப்பின் தட்ப வெப்பநிலை, வந்து சேருகின்ற மீன் பைகளின் நீர்த்தரம், வகைப்படுத்தல் நடவடிக்கை முறை, வகைப்படுத்தல் பாத்திரங்கள், வகைப்படுத்தல் வட்டில்களுக்கான காற்றேற்றம் போன்ற கருமங்களின் மீதான விசேட நோக்குடன் மீனின் தரத்தைப் பாதிக்கும் அழுத்தமான நிலைமைகளை மிகக் குறைவாக்குதல் ;

(இ) மீனை வகைப்படுத்தல் மற்றும் தரப்படுத்தலுக்காக சீமெந்தினாலான அல்லது தரையோடிடப்பட்ட நிலப்பரப்புகள், சிறந்த வடிகாலமைப்பு முறைமை, கொங்கிறீற்று அல்லது துருப்பிடிக்காத உருக்கு இரும்பு மேசைகளைக் கொண்டு, ஒவ்வொரு வந்து சேர்தலின் பின்னர் பாத்திரங்களை உலர்த்துவதற்கான ஆற்றல் ;

(ஈ) இடப்பரப்பின் நன்னீரைப் பயன்படுத்தி ஒவ்வொரு வந்து சேர்தலின் பின்னர் வகைப்படுத்தும் மேசைகள் வட்டில்கள், வலைகள், காற்றேற்றக் குழாய்கள், நிலப்பரப்பு மற்றும் வடிகால்கள் போன்றவற்றை துப்பரவு செய்தல் ;

(உ) நிறநீக்குதூற் போன்ற பொருத்தமானதொரு தொற்றுநீக்கியைப் பயன்படுத்தி வாரத்திற்கு ஒரு தடவை இடப்பரப்பை தொற்று நீக்குதல் ;

(ஊ) தரத்தை மதிப்பிடுவதற்கு செயலிடத்துக்குக் கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு மீனின் கட்புல பரிசோதனைகளுக்கான ஆற்றல் மற்றும் சேதமடைந்த மீன்துடுப்பு அல்லது உடலில் சிராய்ப்புகளுடனான மீன் போன்ற மோசமான தர மீனை அத்தகைய மீன் வழங்குநர்களுக்கு திருப்பி அனுப்புதல் ;

(எ) கைவலையொன்றைப் பயன்படுத்தி பைகளின் உள்ளே பொதியிடும் நீரை வடிப்பதன் மூலம் வகைப்படுத்தும் வட்டில்களில் மீனை இடுதல். இக்கட்டத்தில் மீனுக்கு நன்னீர் அமிழ்த்தல் பரிகரிப்பு வழங்கப்படுதல் வேண்டும் (1 முதல் 2 நிமிடங்கள் வரை) ;

(ஏ) வேறு செயற்பாடுகளுக்கு மீனை வகைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் வட்டில்கள், வாளிகள், கை வலைகள் மற்றும் வேறு பாத்திரங்களைப் பயன்படுத்தாமை ;

(ஐ) துப்பரவான, ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் சுகாதாரத்துக்கு ஒத்த முறையில் இடப்பரப்பைப் பேணுதல்.

பாகம் II

**நன்னீர் அலங்கார மீன் ஏற்றுமதியாளர்களுக்கான நியமங்கள்**

21. (1) ஒவ்வொரு செயலிடமும், தொற்றுத்தடை அல்லது வைத்திருக்கும் இடப்பரப்பு தொடர்பாகப் பின்வரும் வழிமுறைகளைப் பேணுதல் வேண்டும் :

(அ) ஏற்றுமதிக்கு முன்னர் தொற்றுத் தடையிடுவதற்கு ஏற்றுமதி செய்யும் மீனின் தொகையைப் பொறுத்து தொற்றுத்தடை அல்லது வைத்திருக்கும் தொட்டிகளின் போதிய எண்ணிக்கை கிடைக்கக்கூடியதாகவிருக்கின்றமை ;

(ஆ) ஏற்றுமதி செயலிடத்தினுள் தனிவேறான இடப்பரப்பொன்றில் தொற்றுத்தடை அல்லது வைத்திருக்கும் தொட்டிகளை ஒழுங்கேற்பாடு செய்தல் ;

(இ) மீனின் தொகைக்கு இணங்க தொற்றுத்தடை அல்லது வைத்திருக்கும் தொட்டிகளைத் தயாரித்தல் ;

(ஈ) விரும்பத்தக்கதாக வெயிலில் உலர்த்துதல் மூலம் ஒவ்வொரு சுழற்சியின் பின்னர் அல்லது இரு வாரங்களுக்கு ஒரு தடவை சுற்றியுள்ள இடப்பரப்பு உள்ளடங்கலாக எல்லாத் தொற்றுத்தடை அல்லது வைத்திருக்கும் தொட்டிகளை தொற்றுநீக்குதல்.

(2) ஒவ்வொரு செயலிடமும், மீனின் பின்வரும் தொற்றுத்தடை காலப்பகுதிக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்-

| | மீனின் தோற்றுவாய் | தொற்றுத்தடைக் காலப்பகுதி |
|---|---|---|
| 1 | ஏற்றுமதியாளரின் செயலிடங்களில் வளர்க்கப்பட்ட மீன் | தொற்றுத்தடையிடத் தேவையில்லை |
| 2 | சொந்த புற வளர்ப்போர்களிடமிருந்து பெறப்பட்ட மீன் (சொந்த புற வளர்ப்போரின் செயற்பாடுகளின் நுணுக்கமான மேற்பார்வைக்காக ஏற்றுமதியாளர் பொறிமுறையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.) | மூன்று நாட்கள் |
| 3 | பதிவு செய்யப்பட்ட நேரடி வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட மீன் (நேரடி வழங்குநரின் செயற்பாடுகளின் நுணுக்கமான மேற்பார்வைக்காக ஏற்றுமதியாளர் பொறிமுறையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.) | மூன்று நாட்கள் |
| 4 | அறியப்படாத தோற்றுவாய்களிலிருந்து பெறப்பட்ட மீன் | குறைந்தபட்சம் ஏழு நாட்கள் |
| 5 | இயற்கை நீர்ப்பரப்புகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மீன் | இரண்டு வாரங்கள் |
| 6 | மீன் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்பட்ட மீன் | ஏழு நாட்கள் |

22. ஒவ்வொரு செயலிடமும், பதனிடும் தொட்டிகள் தொடர்பாக-

(அ) ஏற்றுமதிக்கு முன்னர் ஏற்றுமதி செய்யப்படும் மீனைப் பதனிடுவதற்கு செயலிடத்தில் உள்ள அத்தகைய மீனின் தொகையைக் கவனத்திற் கொண்டு பதனிடும் தொட்டிகளின் போதிய எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) பொதியிடும் இடப்பரப்புக்கு அருகாமையில் தனிவேறான இடமொன்றில் பதனிடும் தொட்டிகளை ஒழுங்கேற்பாடு செய்தல் வேண்டும் ;

(இ) ஏற்றுமதிக்கு முன்னர் குறைந்தபட்சம் இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்கு மீனைப் பதனிடுதல் வேண்டும் ;

(ஈ) தனிவேறாக மீனை அடுக்கி வைத்தல் மூலம் குறுக்கு மாசுபடுத்துகையைத் தடுத்தல் வேண்டும் ;

(உ) மீனின் இனம் மற்றும் அளவைப் பொருத்து பதனிடும் தொட்டிகளில் தோதான களஞ்சியப்படுத்தும் அடர்த்திகளைப் பேணுதல் வேண்டும் ;

(ஊ) சிரமமின்றி மீனை அவதானிப்பதற்கான ஆற்றலைப் பேணுதல் வேண்டும் ;

(எ) சிரமமின்றி மீன் பிடிப்பதற்கான ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஏ) ஒவ்வொரு கப்பலேற்றுகையின் பின்னர் தொட்டிகள் மற்றும் சுற்றியுள்ள இடப்பரப்பைத் தொற்று நீக்குதல் வேண்டும் ;

(ஐ) பதனிடும் தொட்டிகளுக்காக உச்சளவு நீருடன் வடிகட்டியொன்றினூடாகப் பாய்கின்ற துப்பரவான வடிகட்டப்பட்ட நீரைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஒ) பதனிடும் இடப்பரப்பில் 30C இற்கு அப்பால் காற்று தட்பவெப்பநிலையை அதிகரித்தல் ஆகாது ;

(ஓ) பதனிடும் தொட்டிகளில் ஆபத்து விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் அல்லது அங்கீகரிக்கப்படாத ஔடதங்களைப் பயன்படுத்துதல் ஆகாது.

23. பொதியிடும் இடப்பரப்பு தொடர்பாக, ஒவ்வொரு செயலிடமும்-

(அ) பொதியிடும் இடப்பரப்பில் சூழலை முகாமை செய்வதற்கு முறையாக துப்பரவானதும் ஒழுங்குமுறை யானதுமான முறையில் பொதியிடும் பொருட்கள், சாதனம், இரசாயனப் பொருட்கள் மற்றும் ஆவணங்களைப் பேணுதல் வேண்டும் ;

(ஆ) பொதியிடுவதற்காக தோதானவாறாகப் பரிகரிக்கப்பட்ட நீரைப் பயன்படுத்துதல் வேண்டும் ; அத்துடன்

(இ) பொதியிடுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஒட்சிசனை வழங்குவதற்கு வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

24. செயலிடம் எதுவும், ஏதேனும் மீனை இயற்கை நீர்ப்பரப்புகளுக்கு விடுவித்தலாகாது.

## பாகம் III

### கடல்சார் அலங்கார மீன் ஏற்றுமதியாளர்களுக்கான நியமங்கள்

25. கடலுக்கு அண்மையில் அமைந்துள்ள, கடல்சார் மீன் ஏற்றுமதியில் ஈடுபடும் ஒவ்வொரு செயலிடமும் கடல்நீர் தோய்ப்புக் குழியொன்றினூடாக கடலுக்கு நீரை அகற்றுதல் வேண்டும். அத்தகைய செயலிடம் கடலுக்கு அண்மையில் அமைந்திராதவிடத்து, நீரானது கடலுக்கு இடம்பெயர்க்கப்படுவதற்கு முன்னர் தொற்று நீக்கப்பட்டு நிலக்கீழ் கொங்கிறீற்று குழியொன்றில் வைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அகற்றுகை மத்திய சூழல் அதிகார சபை அல்லது இயைபான மாகாண சூழல் அதிகார சபையின் விதப்புரைகளுக்கு இணங்க செய்யப்படுதல் வேண்டும்.

26. ஒவ்வொரு செயலிடமும், தொற்றுத்தடை அல்லது வைத்திருக்கும் இடப்பரப்பு தொடர்பாகப் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) ஏற்றுமதிக்கு முன்னர் மீனுக்கு தொற்றுத் தடையிடுவதற்காக ஏற்றுமதி செய்யப்படும் மீனின் தொகையைப் பொருத்து தொற்றுத்தடை அல்லது வைத்திருக்கும் தொட்டிகளின் போதிய எண்ணிக்கை ;

(ஆ) தொற்றுத்தடை அல்லது வைத்திருக்கும் தொட்டிகளில் மீள்சுழற்சி நீர் முறைமையொன்று அத்துடன் அத்தகைய மீள்சுழற்சி நீர், சுத்திகரிப்புக்கான பொறிமுறைசார் மற்றும் உயிரியல் வடிகட்டிகள், புரத நீக்கி மற்றும் புற ஊதா வடிகட்டியினூடாக செல்லுதல் வேண்டும் ;

(இ) மீன், கூன் இறால்கள் மற்றும் வேறு முதுகெலும்பிலிகளுக்காக தொற்றுத்தடை சுத்திகரிப்பு அல்லது வைத்திருக்கும் தொட்டிகளுடன் இரண்டும் தனிவேறான மீள்சுழற்சி முறைமைகளின் பேணுகை ;

(ஈ) வெவ்வேறு வகையான மீனின் பேணுகை, தொட்டிகளில் முறையான களஞ்சியப்படுத்தும் அடர்த்தி மற்றும் வலியத்தாக்கும் தன்மை கொண்ட மீனை தனிவேறாகத் தனிமைப்படுத்தல் ;

(உ) ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நன்னீர் மற்றும் குளோரின் அல்லது அழுக்கு நீக்கி போன்ற பொருத்தமான இரசாயனப் பொருளைப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றியுள்ள இடப்பரப்பு உள்ளடங்கலாக எல்லாத் தொற்றுத்தடை அல்லது வைத்திருக்கும் தொட்டிகளை தொற்று நீக்குதல். எவ்வாறாயினும், உயிரியல் வடிகட்டி, இச்செய்முறையின் போது குழப்பப்படுதலோ அல்லது நிறுத்தப்படுதலோ ஆகாது ;

(ஊ) குறைந்தபட்சம் ஏழு நாட்கள் காலப்பகுதியொன்றிற்கு மீனுக்குத் தொற்றுத்தடையிடல்.

27. பொதியிடும் இடப்பரப்பில் முறையான பொதியிடும் பொருட்கள், சாதனம், இரசாயனப் பொருட்கள், ஆவணங்கள் மற்றும் ஒட்சிசன் வசதியை ஒவ்வொரு செயலிடமும் பேணுதல் வேண்டும்.

28. ஒவ்வொரு செயலிடமும், பொதியிடுவதற்காகத் தோதானவாறாகப் பரிகரிக்கப்பட்ட நீரைப் பயன்படுத்துதல் வேண்டும்.

29. மீனின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு வெளிப்புறச் சேதங்கள், சிராய்ப்புகள், வழமைக்கு மாறான நடத்தைக்காக பொதியிடப்படுவதற்கு முன்னர் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மீனும் செவ்வை பார்க்கப்படுதல் வேண்டும்.

30. இவ்வொழுங்குவிதிகளில் "செயலிடம்" என்பது, ஏற்றுமதி நோக்கத்துக்காக உயிர் மீன் வைக்கப்படும் வளவுகள் எனப் பொருள்படும்.

08-425

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.